**செய்தி வெளியீடு எண்:225** **நாள்:04.06.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு மத்திய ஊரக வளர்ச்சி மற்றும் விவசாயத்துறை அமைச்சர் திரு. நரேந்திர சிங் தோமர் அவர்களின் தலைமையில் காணொளி மூலம் நடைபெற்ற ஊராட்சிகள் மேற்கொள்ள வேண்டிய சேவைகளின் தொகுப்பு மற்றும் மாதிரி மக்கள் சாசனம் வெளியீட்டு நிகழ்வில் மாண்புமிகு தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் கலந்து கொண்டு மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப் பணிகள் பற்றி எடுத்துரைத்தார்.

தமிழக அமைச்சரவையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அமைச்சராக பதவியேற்ற பின் மத்திய அரசிடம் உரையாற்றும் முதல் நிகழ்வாக இது உள்ளதால், இவ்வேலையில் மாநில ஊரக பகுதிகளின் வளர்ச்சிக்காக ஒன்றிய அரசும் மாநில அரசும் இணைந்து பணியாற்ற வேண்டும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தேர்தல் பரப்புரையின் போது தமிழ்நாட்டின் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான 7 முக்கிய செயற்திட்டங்களை வெளியிட்டுள்ளார். இச்செயற்திட்டம் பொருளாதார வளர்ச்சி, வேளாண்மை, நீர்வளம், கல்வி, சுகாதாரம், ஊரக உட்கட்டமைப்பு மற்றும் சமூக நீதி ஆகியனவற்றை உள்ளடக்கியுள்ளது.

மேலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்பு துணை முதல்வராக இருந்தபோது அவர் தலைமையிலான உயர்நிலைக்குழு பல்வேறு பரிந்துரைகளை ஊரக உள்ளாட்சி அமைப்புகளை வலிமைப்படுத்துவதற்காக வழங்கியது. அதனடிப்படையில் பல்வேறு அதிகாரப் பகிர்வு, நிதி பகிர்வு மற்றும் நிர்வாகப் பகிர்வுகளை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கி அரசாணைகள், வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் உத்தரவுகள் வழங்கப்பட்டன எனவும் தெரிவித்தார்.

மேலும் தமிழகமானது ஊராட்சித் தொடர்பான மாதிரி மக்கள் சாசனத்தை தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் வெளியிட்டு வரும் நடைமுறையினை பின்பற்றி வருகின்றது. இந்நிகழ்வில் மத்திய அரசினால் வெளியிடப்பட்டுள்ள மாதிரி மக்கள் சாசனம் தமிழகத்தின் தேவைக்கேற்ப ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தி ஊரக உள்ளாட்சி அமைப்புகளை வலிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த சாசனத்தால் மக்கள், அரசு வழங்கும் பல்வேறு சேவைகளில் அவர்களது உரிமையினை நிலைநாட்ட முடியும். எனவே, ஊரக உள்ளாட்சி அமைப்புகளை வலிமைப்படுத்தும் விதமாக தமிழக அரசு முன்னெடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஒன்றிய அரசு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இக்காணொளிக் கலந்துரையாடலில் பல்வேறு மாநில ஊராட்சித் துறையின் மாண்புமிகு அமைச்சர்கள் கலந்துகொண்டனர். தமிழகத்தினைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலர் டாக்டர்.கே. கோபால். இ.ஆ.ப., கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை பயிற்சி தலைவர் திருமதி. ஜெயஸ்ரீ ரகுநந்தன் இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆணையர் டாக்டர்.கே.எஸ். பழனிசாமி இ.ஆ.ப., மற்றும் துறையின் உயர்அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**